பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ., எம். பி.

மலர் : 16] சென்னை : ஆனி 11 (24—6—68) திங்கள் ★ வெளியூர் : ஆனி 12 (25—6—68) செவ்வாய் [இதழ் : 8

பொதுமக்களுக்கான சேமிப்பு நிதி

புதுடில்லி, ஜுன் 24—

மத்திய அரசு புதிதாக உருவாக்கியுள்ள பொதுமக்கள் சேமிப்பு நிதித் திட்டம் (பப்ளிக் பிராவிடண்ட் பண்டு) வருகிற ஜுலை முதல் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

இத்திட்டத்தில் யார் விரும்பினாலும் பணம் போடலாம். ஆண்டுக்கு ரூ. 100-க்குக் குறையாமலும், ரூ. 15,000-த்துக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும். இதற்கு 4.8 சதவிகித வட்டியுண்டு.

சேலம் உருக்காலை உண்டா — இல்லையா?

மழுப்புகிறார் தமிழகத்திற்கு வந்துள்ள மத்திய அமைச்சர்

நிதி நிலை—தொழில் நுட்ப வசதிகளைப் பொறுத்தே முடிவு செய்யப்படுமாம்

தஸ்தூர் அறிக்கை போதாதாம் — விரிவான அறிக்கை வேண்டுமாம்

சென்னை, ஜுன் 23—

"நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேலம் உருக்காலைத் திட்டத்தைச் சேர்ப்பதற்கும் மத்திய அரசு தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளவில்லை; அது நான்காவது திட்டத்தில் சேர்க்கப்படுவதற்குள்ள வாய்ப்பு புறக்கணிக்கப்படவுமில்லை.

"இப்போதைய பொருளாதார நிலைமையையும் உருக்கு — உருக்குப் பொருள்களின் தேவைகளையும் கருத்தில் கொண்டு, உருக்காலைகள் சம்பந்தமான பிரச்சினை முழுவதையும் அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது"

என்று மத்திய அரசின் உருக்குத்துறை துணையமைச்சர் பி. சி சேத்தி, செய்தியாளர்களிடம் கூறியுள்ளார். இது பற்றி அவர் மேலும் கூறியிருப்பதாவது :—

"இது சம்பந்தமாகத் தேசிய பொருளாதார ஆராய்ச்சி நிலையம் தன்னுடைய அறிக்கையை அளித்திருக்கிறது; அதை உருக்குத் துறை பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது; பரிசீலனை முடிந்த பின், நான்காவது திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய பிரேரணைகளை உருவாக்கித் திட்டக் குழுவின் பரிசீலனைக்கு உருக்குத் துறை அனுப்பிவைக்கும்.

கிடைக்கக்கூடிய நிதி வசதி [illegible] —உருக்குத் தே[illegible] தின் பொருளா[illegible] நுட்ப வாய்ப்பு[illegible] றைப் பொ[illegible] நான்காவ[illegible] சேலம் [illegible] சேர்க்கும் [illegible]

"பொருளாதார[illegible] மை காரணமா[illegible] காலைத் திட்டம் கைவிடப்பட்டதா? அல்லது, 'நான்காவது திட்டத்தில் சேலம் உருக்கு ஆலை சாதாரண அளவில் ஆரம்பிக்கப்படும்' என்று தமிழக முதலமைச்சர் அண்மையில் தெரிவித்த நம்பிக்கையைப் பகிர்ந்து கொள்கிறீர்களா?"

என்று கேட்டபோது, அமைச்சர் கூறியதாவது :—

"திட்டம் சம்பந்தமாகத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கில்லை; அது அமைவதற்குள்ள வாய்ப்பை புறக்கணிக்கவுமில்லை.

'சேலம் உருக்காலை இயலக்கூடியதே' என்று தஸ்தூர் அறிக்கை கூறியிருப்பதைச் சுட்டிக்காட்டிய போது,

"அது மட்டும் போதாது; விரிவான அறிக்கை அவசியமாகும்"

என்று தட்டிக்கழித்த துணையமைச்சர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"எதிர்காலத்தில் உருக்காலைகளை அமைக்கும்போது தொழில்களைப் பரவலாக அமைப்பது பற்றியும் விவாதிக்கப்படும்.

"நான்காவது திட்டப் பிரேரணைகளைத் திட்டக் குழு பரிசிலனை செய்யத் துவங்கும்போது, சேலம் உருக்காலையை ஆரம்பிப்பதற்கான தம்முடைய கட்சியை தமிழக முதலமைச்சர் எடுத்துரைப்பது சரியாக இருக்கும்."

நாணயமான வாழ்க்கைக்கு ஓர் அடையாளம்!

சென்னை, ஜுன் 24—

"மனித வாழ்விற்கு இன்றியமையாத வேண்டப்படுவது—உணவு, உடை; மூன்றாவதாக குடியிருக்கும் இடம்.

"உணவு முதலாவது இடத்தை வகிக்கிறதென்றாலும் குடியிருக்க ஓர் இடம் இருப்பது என்பது, நாணயமான வாழ்விற்கு ஓர் அடையாளமாகும்!

"போகின்ற போதே கிடைத்த உணவை உட்கொள்பவை பறவைகள்!

"கிடைக்கின்றபோது கண்ட இடத்தில் சாப்பிடுபவர்கள்—சாதுக்கள், சந்நியாசிகள், பரதேசிகள்.

"மனிதர்கள் தாம், பாடுபட்டு உழைத்துப் பெற்ற உணவை தமக்கென்று அமைந்த குடிலில் வைத்துச் சாப்பிடக் கூடியவர்கள்! அந்த உணவு எப்படிப்பட்டதாக இருந்த போதிலும், சொந்த இடத்தில் சாப்பிடுவதில் உள்ள சுவை மற்றதில் கிடைக்காது!

—அறிஞர் அண்ணா

(கோயம்பேடு விழாவில்)

முந்திய அரசின் பொருந்தாச் செயல்!

"இங்கு தொழிற்சாலை பற்றி எளிதாக விளக்கினார்கள்; ஆனால் அரசு நடத்தும் தொழிற்சாலைக்குச் சென்று விளக்கம் தரும்படி கேட்டால், அச்சடிக்கப்பட்ட புத்தகங்களைக் கொடுப்பார்கள்! ஒரு தொழிலில் இருப்பவர்களை இன்னொரு தொழிலுக்கு மாற்றி விடுவார்கள்! உதாரணத்துக்கு ஒன்றை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

[illegible]ழகத்தில் முன்பிருந்த [illegible]ஷ்யம் என்ப[illegible] பண்ணை பற்றி [illegible]னுக்கு அனுப்[illegible]ல், அவர் அங்[illegible] திரும்பி வந்தவுடன், [illegible]விரை[illegible]ஞ்சைக்குக் கலெக்[illegible] நியமித்துவிட்டனர்! [illegible]ல் பண்ணை பற்றி அவர் அறிந்து வந்தது அதற்குப் பயன் படவில்லை!

"அதுபோல், இன்னொருவரை தென் அமெரிக்காவுக்கு அனுப்பி, மலிவு விலையில் வீடு கட்டுவதை அறிந்துவரச் செய்தனர்; ஆனால் அவர் தென் அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்தவுடன், தென் ஆற்காட்டிற்குக் கலெக்டராக நியமித்துவிட்டனர்!

"இதெல்லாம், முன்பிருந்த அரசாங்கத்தில்தான் நடந்தது!"

—அறிஞர் அண்ணா

(கோயம்பேடு விழாவில்)

ஒருமைப்பாட்டுக்குழுவில் தமிழக அரசுக்கு வெற்றி

அமைச்சர் செ. மாதவன் தெரிவித்த கருத்து ஏற்கப்பட்டது

பாட நூல் குழுவில் மத்திய ஆதிக்கம் இருக்காது

புதுடில்லி, ஜுன் 23—

ஸ்ரீநகரில் கூடிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் தமிழக அரசின் கருத்து தனிச் சிறப்புப் பெற்றது.

தமிழக அரசின் பிரதிநிதியாகக் கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழகச் சட்டத் துறை அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்களால் கல்விபற்றிய துணைக் குழுவின் அறிக்கைக்குத் தரப்பட்ட திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"பாட நூல்களைத் தேர்ந்தெடுக்கவும், பாட நூல் எழுதுவோருக்கு அறிவுரைகள் வழங்கவுமான தேசியக் குழு ஒன்றை நியமிக்க வேண்டும்" என்று துணைக் குழு ஒருமுகமாகப் பரிந்துரைத்திருக்கிறது.

பாட நூல்களைத் தயாரிக்கவும், திருத்தியமைக்கவும் மாநிலங்களில் அமைக்க எண்ணியுள்ள பாட நூல் கழகங்களுடன் இணைந்து ஒத்துழைக்கும்வகையில் தேசிய கழகம் (போர்டு) ஒன்றை அமைக்கவும் அது யோசனை கூறியுள்ளது.

அரசின் மொழிக் கொள்கைமீதான தமது கருத்துக்களை வெளிப்படுத்திய அமைச்சர் மாதவன் அவர்கள், மத்தியக் கழகம், தீர்ப்பளிக்கும் மேலாதிக்கம் கொண்ட அமைப்பாக இல்லாமல், மாநிலக் கழகங்களுடன் கலந்து, அவற்றின் கருத்தறிந்து செயல்படும் அமைப்பாக இருக்குமாறு துணைக் குழுவின அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடவேண்டும் என்று வற்புறுத்தினார். இதன்மூலம், மாநிலப் பாட நூல் கழகங்களின் தன்னுரிமை, எவ்விதக் குழப்பத்துக்கும் இடமில்லாமல் உறுதி செய்யப்பட்டுவிட்டது.

மொரார்ஜியின் சகிப்பின்மை

ஆனால், சென்ற ஆண்டு டெல்லியில் நடந்த சட்ட அமைச்சர்கள் மாநாட்டில், மொழிப் பிரச்சினைமீது அமைச்சர் மாதவனுடன் மோதிய துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய்க்கு, 'மாதவன் போன்ற சிறுபான்மையினரின் கருத்து ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது பொறுக்கவில்லை' என்று நம்பப்படுகிறது.

நேற்றைய கூட்டத்தில், 'இனிமேல் பெரும்பான்மைக் கருத்தை அடிப்படையாகக் கொண்டுதான் முடிவு செய்ய வேண்டும்' என்று அவர் கூறியதாகத் தெரிகிறது. இது, குழுவின் பல்வேறு பிரிவினரிடையே வெறுப்பை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

மாவட்ட கலெக்டரின் சீரிய செயல்!

தம் இரத்தத்தைக் கொடுத்து இரு உயிர்களைக் காப்பாற்றினார்

கோட்டயம், ஜுன் 22—

உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த நோயாளி ஒருவருக்குத் தமது இரத்தத்தைக் கொடுத்துப் பிழைக்க வைத்திருக்கிறார்—மாவட்டக் கலெக்டர் ஒருவர்!

இங்குள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், சரோஜனியம்மா என்னும் 39 வயதுப் பெண்மணிக்கு அறுவைச் சிகிச்சை செய்து வயிற்றிலிருந்த குழந்தை வெளியே எடுக்கப்பட்டது. அப்போது அவசரமாக உடலில் இரத்தம் செலுத்த வேண்டியிருந்தது. அந்த நேரத்தில் மருத்துவமனையின் இரத்தச் சேமிப்பு நிலையத்தில் இரத்தம் இருப்பில் இல்லை. உடனே மருத்துவமனையின் மேலதிகாரி மாவட்டக் கலெக்டருடன் தொடர்பு கொண்டு, 'என்ன செய்வது' என்று யோசனை கேட்டார். (மருத்துவமனை ஆலோசனைக் குழுவின் தலைவரும் மாவட்டக் கலெக்டரேயாவார்.)

நிலைமையறிந்து கலெக்டரே மருத்துவமனைக்கு விரைந்து வந்து, தமது இரத்தத்தைக் கொடுக்க முன்வந்தார்.

திரு. டி. என். ஜெயச்சந்திரன் என்னும் அந்தக் கலெக்டர் தமது உடலிலிருந்து 250 சி. சி. இரத்தம் கொடுத்தார்.

உரிய நேரத்தில் அவர் இந்த உதவியைச் செய்ய முன்வந்ததால் தாயும் சேயும் உயிர் பிழைத்தனர்.

உணர்ந்து செயல்பட்டோம்—உருவான பலன் கிடைத்து வருகிறது!

பாட்டாளிகள் நலனுக்காகத் தீட்டிய திட்டத்தைத் 'தீமை'யெனக் கூறுவது அறிவுக்குப் பொருந்தக் கூடியதா?

காங்கிரசுக் கட்சியினரின் கண்மூடித்தனமான போக்கு—தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் கண்டன உரை

சென்னை ஜூன் 21

"தென்காசிப் பகுதியில் விலைகள் மிகவும் குறைந்துவிட்டன. தென்காசிப் பகுதியில் பக்தவத்சலம் ஆட்சியில் 100 கிலோ மிளகாய் வற்றல் ரூ 900; இன்று அண்ணா ஆட்சியில் ரூ. 140; ஒரு குவிண்டால் கடலைப் பருப்பு அன்று ரூ. 272; இன்று ரூ. 102; துவரம் பருப்பு அன்று ஒரு குவிண்டால் ரூ. 230 இன்று ரூ. 135; கடுகு ஒரு குவிண்டால் அன்று ரூ. 220 இன்று ரூ. 105; புளி 100 கிலோ அன்று ரூ. 400 - இன்று ரூ. 140; கடலெண்ணெய 1 லிட்டர் அன்று ரூ 4.30—இன்று ரூ. 2.50; நல்லெண்ணெய அன்று ஒரு லிட்டர் ரூ. 4.70—இன்று ரூ. 3.20.

"இவற்றையெல்லாம் ஏன் கூறுகிறேனென்றால், 'அரிசியை ரூபாய்க்கு ஒரு படி போட்டதன் மூலம் மற்ற பண்டங்களின் விலையும் குறைந்துள்ளது' என்பதற்காகத்தான்!

"மாட்டை அடக்குவதற்குக் காலையும், கொம்பையும், வாலையும் பிடித்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை—தும்பைப் பிடித்தால் போதும்! அதுபோல எல்லாப் பொருள்களின் விலையும் குறைய வேண்டுமானால், அரிசி விலையைக் குறைத்தால் போதுமென்று உணர்ந்து நாம் செயல்பட்டோம்; மற்ற பொருள்களின் விலையும் குறைய ஆரம்பித்துவிட்டது; மதுரை போன்ற இடங்களில் இட்லி, தோசை போன்ற பண்டங்களின் விலைகளைக் குறைக்க ஓட்டல் அதிபர்கள் முன்வந்துள்ளதும் படி அரிசித் திட்டத்தின் விளைவுதான்!

"1965—66-ம் ஆண்டினைவிட இந்த ஆண்டில் மழை குறைவாகவே பெய்தது; இருந்தபோதும், நமது ஓராண்டுக்கால நல்ல திட்டத்தால் 1965—66-ம் ஆண்டைவிட ஏழரை இலட்சம் டன் அதிகம் உணவுப் பொருள் உற்பத்தி செய்திருக்கிறோம்"

இவ்வாறு கல்வி–தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தமிழகக் காங்கிரசாரின் கருத்துக்கள் ஏதுமற்ற பேச்சுக்களைக் கண்டிக்கும் அளவிலும், பொறுப்பற்ற முறையில் அவர்கள் மக்களிடையே, குழப்பத்தை உருவாக்க முயற்சிப்பதை எள்ளி நகையாடும் வகையிலும் புள்ளிவிவரங்கள் தந்தும் விளக்கிக் கூறினர்.

சென்னை 84-வது வட்டம் சீனிவாசராவ் தெருவில் வள்ளுவர் பொதுப் பணிமன்றத்தின் சார்பில் தோழர் குப்புசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தோழர்கள் எஸ். வி. வேலு, நாகப்பன், கோவிந்தசாமி, சிவானந்தம், அமைப்புச் செயலாளர் என். வி நடராசன் ஆகியோர் பேசினர்.

இறுதியில் அமைச்சர் நெடுஞ்செழியன் பேசியதாவது:—

இப்படி நான் கேட்கட்டுமா?

பாட்டாளிகள், ஏழை எளியவர்கள் பயனடையும் வகையில் நாம் படி அரிசி போடும்போது பக்தவத்சலம் உட்பட பல காங்கிரசுப் பெரியவர்கள், 'சென்னையிலும், கோவையிலும்தான் மக்கள் இருக்கிறார்களா?' என்று கேட்கிறார்கள்.

நான் அவர்களைக் கேட்கிறேன்—'1963–64-ல், 'ரேஷன்' பங்கீட்டு முறையைச் சென்னைக்கும், கோவைக்கும் மட்டும் ஏன் கொண்டுவந்தீர்கள்?' என்று.

கூடுவாஞ்சேரிக்கும்—கொரடாச்சேரிக்கும், மன் [illegible] குடிக்கு?—மதுரைக்கும் ஏ[illegible] கொண்டு [illegible] வில்லை? அப்படியானால், சென்னையிலும் கோவையிலும் தான் மக்கள் இருக்கிறார்களா?

ஏன்—எதற்குக் கொடுக்கிறோம்?

கடப்பூரில் குடியிருக்கும் ஒரு தலைமை ஆசிரியருக்கும், சென்னையில் குடியிருக்கும் ஒரு தலைமை ஆசிரியருக்கும் சம்பளம் ஒன்றுதான்; ஆனால், கடம்பூர்க்காரர் ரூ. 8 வீட்டு வாடகை தருகிறார்: சென்னைக்காரர் ரூ. 75 தருகிறார்.

நடந்தே போய் பள்ளியிலிருந்து நடந்தே வருகிறார்—கடம்பூர்க்காரர்; ஆனால் சென்னைக்காரர் அப்படியில்லை; ஐயனாவரத்திலிருந்து மாம்பலத்திற்குப் போக வேண்டும்; அதனால்தான் நகர ஈட்டுப் படி கொடுக்கப்படுகிறது: அதனால்தான், 'ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட்டாவது அவர்களது துயரத்தைக் கொஞ்சம் குறைக்கலாம்' என்று சென்னையிலும், கோவையிலும் படி அரிசி போடுகிறோம்.

எண்ணினேம்—கேட்கிறோம்!

ரூபாய்க்கு ஒரு படி அரிசி வாங்கி 40 இலட்சம் பேரும்; படி அரிசி ரூ. 1 20-க்கு வாங்கி 1 கோடியே 20 இலட்சம் பேரும் பயனடைகிறார்கள்.

இவ்வகையில் அரசுக்கு ஏற்படும் நட்டம் ரூ. 8 கோடி; இதற்கு இத்தொகையில் ஒதுக்கிய பின்னர்தான், ரூ. 74 இலட்சம் மிச்சமுள்ள பட்ஜெட் தயாரிக்கப்பட்டது. இன்னும் ரூ. 12 கோடி இருந்தால், தமிழகம் முழுவதும் படி அரிசி போடலாம். இதை எண்ணித்தான் மத்திய அரசிடம் பணம் கேட்கிறோம்.

'படி அரிசித் திட்டம் பைத்தியக்காரத்தனம்' என்கிறார் சுப்பிரமணியம்!

நான் கேட்கிறேன்—அரிசியை விட சிமெண்டு ரோடு முக்கியமா? பளிங்கு மாளிகை முக்கியமா?

எது பைத்தியக்காரத்தனம்?

கல்விக்காக நாம் ரூ. 58-கோடி செலவு செய்கிறோம். மாணவர்கள் 'பீஸ்' கட்டுவது போன்ற வகைகளில் 1 கோடியே 13 இலட்சம் ரூபாய்தான் வருமானம் வருகிறது.

மருத்துவச் செலவுக்கு 13 கோடியே 43-இலட்சம் ரூபாய் செலவு செய்கிறோம்; ஆனால் இத்துறையில் 1-கோடியே 17 இலட்சம் ரூபாய்தான் வருமானம் வருகிறது.

சாலைகள் போட 4-கோடியே 89-இலட்சம் ரூபாய் செலவு செய்கிறோம். சாலையின் ஓரத்திலும்—மரங்கள்மூலமாகவும், மற்ற வகைகளிலும் இத்துறையில் 70-ஆயிரம் ரூபாய்தான் வருமானம் வருகிறது.

இப்படிப் பல துறைகளுக்கு வருமானத்தைவிடப் பலப்பல மடங்கு செலவிடும்போது உயிர்ப் பிரச்சினையாகிய உணவுப் பிரச்சினைக்கு ரூ. 8-கோடி செலவிடுவது பைத்தியக்காரத்தனமா?

தென்காசி இடைத் தேர்தல் வாக்குப் பதிவு நேரம்

சென்னை, ஜூன் 24—

தென்காசி சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலில், ஜூலை 3-ம் நாள் புதன்கிழமை காலை 8-மணியிலிருந்து மாலை 5-மணி வரையில் வாக்குப் பதிவு நடைபெறும்.

ஐந்தாண்டுத் திட்டங்களால் கிராம மக்களின் குறைகள் தீர்ந்ததா?

அமைச்சர் கே. ஏ. மதியழகன் கண்ணோட்டம்

மதுராந்தகம், ஜூலை 24—

"பல ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டும்—கோடிக் கணக்கான பணம் செலவு செய்தும், இன்னும் கிராம மக்களின் குறைகள் தீர்ந்தபாடில்லை; இன்னும் பல கிராமங்கள் குடிநீர் வசதியைக்கூடப் பெறவில்லை; இந்த நிலை இன்னும் இருப்பது வருந்தத்தக்கதாகும்"

என்று உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், விழா ஒன்றில் பேசுகையில் சுட்டிக் காட்டினர்.

செங்கற்பட்டுக்கு அருகிலுள்ள சாலவாக்கம் கிராமத்தில் ரூ. 20,000 செலவில் கட்டப்பட்ட விவசாயக் கிடங்கையும், ரூ 5,000 செலவில் கட்டப்பட்ட மருத்துவமனையையும் திறந்து வைத்துப் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இன்று கிராமங்களில் புதிய எழுச்சி ஏற்பட்டிருக்கிறது. எல்லா வசதிகளும் பெற இயலும் அளவுக்குக் கிராமங்கள் முன்னேற்றமடைய வேண்டும்.

தமிழக அரசின் மாபெரும் சாதனை

"தமிழ்நாட்டில் உணவு நெருக்கடி தீர்ந்துவிட்டது; அரிசி விலை எங்கும் குறைந்திருக்கிறது.

"சென்னையில் 30-இலட்சம் பேருக்கும், சென்னையின் 77

(4-ம் பக்கம் பார்க்க)

அந்தநல்லூர் ஒன்றியத்தில் சிரணிப் பணி

சிறப்புக் கூட்டத்தில் திட்டம் வகுப்பு

அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றிய சிரணியின் சிறப்புக் கூட்டம் அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஆணையர் கே. தர்மராசன் ஐ.ஏ.எஸ். தலைமையில் 1—6—68-ல் நடைபெற்றது. ஒன்றியத் துணை ஆணையர் எம். கெஞ்சப்பன் அனைவரையும் வரவேற்றார்; வட்டார சிரணித் தலைவர் டி. என். வையாளி, சிர[illegible] தொண்டர் சத்திய[illegible] பி.எல்., கோப்[illegible] யினருக்கு அ[illegible] கினர்.

திரு. கே. த[illegible] யின் முக்கியத்துவம் [illegible] ஒத்துழைப்புப் ப[illegible] துரைத்து, தொண்ட[illegible] அதிக எண்ணிக்கை [illegible] வேண்டுமென்றும் வலியுறுத்தி[illegible].

கூட்டத்தில் கலந்துகொண்ட கிராம நல ஊழியர்களும், ஒவ்வொருவரும் தத்தமது தொகுதியிலிருந்து தொகுதிக்கு மேலும் 10 தொண்டர்கள் புதிதாக சேர்ப்பதென்று உறுதி எடுத்துக்கொண்டனர்.

சிறப்புக் கூட்டத்தில் 1968—69-ம் ஆண்டில செய்யப்படவிருக்கும் வேலைகளைப் பற்றி ஆராய்ந்து செயல் திட்டம் வகுக்கப்பட்டது மேலும், திருப்பராய்த்துறை முதல் சிறுகமணி வரை செல்லும் அம்மன் வாய்க்காலை ஆழமாக வெட்டுவதற்கு அரசினர் உதவி பெறத் தீர்மானிக்கப்பட்டது.

திரு. டி. என். ரெங்கநாதன் நன்றி கூறினர்.

நிர்வகிக்கும் குழுவில் ஒழுங்கீனங்கள்!

அமைச்சர் தரும் தகவல்

நாகர்கோயில், ஜுன் 24—

"தமிழ்நாட்டில் முஸ்லிம் தர்ம சொத்துக்களை நிர்வகிப்பதற்காக ஒரு குழு இருந்துவந்தது; ஆனால், குழுவின் நிர்வாகத்தில் ஒழுங்கீனங்கள் இருந்ததால் அது கலைக்கப்பட்டு, இவ்விவகாரத்தைக் கவனிப்பதற்காகத் தனி அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்."

என்று நலத்துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா தெரிவித்துள்ளார்; அதுபற்றி அவர் மேலும் சுட்டிக்காட்டியிருப்பதாவது:—

"கோவை, மதுரை, திருச்சி, வடாற்காடு, தென்னாற்காடு மாவட்டங்களில் முஸ்லிம் தர்ம சொத்துக்களில் கையாடல் நடந்துள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது; இம்மாதிரி, 6,000-க்கும் அதிகமான சம்பவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன; இது சம்பந்தமாக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன."

வெளிநாட்டு உதவியால் தொழில் வளம் பெருகாது

சொந்த முயற்சியே நிரந்தரமானது

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, ஜூன் 24—

"[illegible]ல் தொழில் வளம் முழுக்க முழுக்க நம் [illegible] முயற்சியில் வளருவதையே நான் விரும்பு[illegible] வெளிநாட்டு உதவியால் நிரந்தரமாகத் [illegible]தைப் பெருக்க முடியாது.

"[illegible] நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் [illegible] வருவதற்குக் காலதாமதமாவதாலும், [illegible] ஆண்டுகளாக வரட்சி நிலவியதாலும் [illegible]தம் ஏற்பட்டிருக்கிறது; இது தற்காலிக[illegible] தவிர, நிரந்தரமானது அல்ல"

என்று தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், இந்துஸ்தான் வர்த்தகச் சபையின் 22-வது மாநாட்டைத் தொடங்கிவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"வெளிநாட்டு உதவி நமக்குக் கிடைக்கிறதென்றால், 'நாளையும் அது நிரந்தரமாகக் கிடைக்குமா?' என்பதைத் தொழிலதிபர்கள் சிந்திக்க வேண்டும்.

"உணவு உற்பத்தியைப் பொருத்தவரையில், தமிழகம் இப்போது உபரி மாநிலமாகத் திகழ்கிறது.

"விவசாயம் நம் நாட்டிற்கு முதுகெலும்புபோல் இருப்பதால், நாம் அந்தத் துறைக்கு முதலிடம் தருகிறோம்.

"இதுபோன்ற விவசாய சங்க[illegible]கள், 'விவசாயிகளுக்கு என்னென்ன தேவைப்படுகின்றன—எவ்வளவு தேவைப்படுகின்றன—அவர்களது வாங்கும் சக்தி எவ்வளவு—என்பன போன்றவைகளை ஆய்வு செய்து அரசுக்குத் தெரிவித்தால், தொழில் துறையை அந்தத் திசையில் திருப்புவதற்கு வழிகோலுவதாக அமையும்."

இலக்கணமே இன்னும் உருவாக்கிக் கொள்ளாத இந்திமொழி

அ. இ. காங்கிரசுத் தலைவரே தரும் 'சர்ட்டிபிகேட்'

ஸ்ரீநகர், ஜுன் 24—இந்தியாவின் ஒரே ஆட்சிமொழியாக மகுடஞ் சூட்டிக்கொள்ளத் துடித்துக் கொண்டிருக்கும் இந்தி மொழியின் இலட்சணத்தை, அனைத்திந்திய காங்கிரசுத் தலைவரான திரு. நிஜலிங்கப்பாவே அம்பலப்படுத்தியிருக்கிறார்.

"இன்னும் அந்த மொழிக்கு இலக்கணமே சரிவர உருவாக்கவில்லை" என்பதை அவர் சரியான இடத்தில்--சரியான நேரத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஸ்ரீநகரில் நடக்கும் ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் பேசிய திரு. நிஜலிங்கப்பா, தாம் இந்தி கற்றுக்கொண்டு வருவதாகவும், இந்தியின் இலக்கணம் குழப்பமாக இருப்பதாகவும் கூறினார்.

'நல்ல முறையில் இலக்கணம் உருவாக்க வேண்டும்' என்று தெரிவித்த அவர், 'தென்னாட்டுக்காரர் ஒருவரைக் கொண்டே அந்தப் பணியைச் செய்து முடிக்க வேண்டும்' என்றும் கருத்தறிவித்திருக்கிறார்.

இனிமேல் இலக்கணம் உருவாகி--அதன்பின் சொல் வளத்தையும் இலக்கிய வளத்தையும் பெறவேண்டிய இந்தி மொழியைத்தான் வடக்கத்தி இந்தி வெறியர், நம்மீது திணிக்க துடித்துக் கொண்டிருக்கிறார்கள்!

ஏதுமில்லாத .இந்த மொழிதான், எல்லாம் வல்ல ஆங்கிலத்தை அகற்றிவிடப் போகிறதாம்!

படிமக் கலை வளர்ச்சி காட்டும் பொருட்காட்சி

சென்னை, ஜுன் 24—சென்னையிலுள்ள அரசாங்க அரும்பொருள் களஞ்சியத்தில் அரிய கணேசர் படிமங்கள் இருக்கின்றன.

கல், செம்பு, மரம் ஆகியவற்றாலான இப்படிமங்கள் இப்பொழுது காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

நூற்றாண்டு விழாப் பொருட்காட்சி மண்டபத்தில் காலை 10 30 மணியிலிருந்து மாலை 5-30 மணி வரை (வெள்ளிக்கிழமை நீங்கலாக) நாள்தோறும் பொதுமக்கள் இவற்றைப் பார்வையிடலாம்.

ஜுன் 30-ம் நாள் வரை நடக்கும் இப்பொருட்காட்சி, படிமக் கலை வளர்ச்சியைப் பாங்குடன் சித்தரிப்பதாகும்.

படிமங்கள் மட்டுமின்றி, புகைப் படங்கள், விளக்கப் படங்கள் ஆகியவையும் இடம் பெற்றுள்ளன.

தொல்பொருள் மற்றும் கலைத் துறை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கணேசர் படிமங்களைப் பற்றிப் பொதுமக்கள் நன்கு அறிந்துகொள்ளச் செய்வதே இந்தப் பொருட்காட்சியின் நோக்கமாகும்.

ஆண்டு வருமானம் ரூ. 800 கோடி

அமெரிக்கத் தேவாலயங்களின் சொத்து விவரம்

வாஷிங்டன், ஜுன் 24—அமெரிக்காவில் 3,50,000 தேவாலயங்கள் இருக்கின்றன; அவற்றின் ஆண்டு வருமானம் 800 கோடி டாலர் (ரூ 6,000 கோடி) மத நிறுவனங்களின் வருமானங்களின் வரி கிடையாது. அவற்றின் சொத்து மதிப்பு ரூ. 60,000 கோடி இருக்குமென்று மதிப்பிடுகிறார்கள்.

மக்களின் 750 இலட்சம் பேர் பிராடெஸ்டெண்டுகள்; 470 இலட்சம் பேர் சத்தோலிக்கர்; 60 இலட்சம் பேர் யூதர்; 30 இலட்சம் பேர் வைதிக திருச்சபையினர்.

நாட்டைச் சிதறடித்த குற்றத்துக்கு ஆளாக வேண்டாம்!

மொரார்ஜிக்கு கி. மனோகரன் எச்சரிக்கை

"தி.மு. கழகத்தின் ஆட்சி, ஏழைப் பாட்டாளி மக்களின் ஆட்சி! இந்த ஆட்சி தமிழக வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை எழுதிக்கொண்டிருக்கிறது.

"மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தி.மு.க-வினர், ஐந்தாண்டுக் காலம் நாட்டை ஆளவும், சாதனைகள் ஆற்றவும் மக்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்.

"நாம் இப்போது பொறுப்போடு காரியமாற்றும் நிலையில் இருக்கிறோம். பாட்டாளி மக்களின் கண்ணீரை எப்படித் துடைக்கப்போகிறோம்?—மேலும் மேலும் எங்கெங்கத் திட்டங்களை எப்படி நிறைவேற்றுவது?—திட்டங்களுக்குத் தேவையான நிதியை மத்திய அரசுடன் எப்படிப் போராடிப் பெறுவது?—இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முனைந்திருக்கிறோம்.

"நாளுக்கு நாள் மத்திய அரசின் போக்கு பிடிவாதமுள்ளதாகவும், மொரார்ஜி தேசாய் போன்றவர்களின் பேச்சு இந்திய ஒருமைப்பாட்டைச் சீர்குலைப்பதாகவும் இருந்துவருகிறது.

"இந்தியா துண்டு துண்டாகச் சிதறும் நிலை ஏற்பட்டால், அதற்குக் காங்கிரசின் போக்கும் மத்திய அரசுமே காரணமாகும்.

"மத்திய அரசினருக்கும் காங்கிரசாருக்கும் ஓர் அறைகூவலாகக் கூறுகிறேன்— 'தி.மு.க. அரசுடன் போராடுங்கள்; ஆனால், மக்களின் உணர்ச்சியுடன் போராடாதீர்கள்' என்று!

"இந்தியைத் திணித்தால் எந்த மாநிலமும் ஏற்றுக்கொள்ளும் என்று நினைக்காதீர்கள்! இதுவரையில் இந்திக்கு ஆதரவு கொடுத்துவந்த கேரளத்தின் முதலமைச்சர். 'எப்படியாவது இந்தியைத் திணித்தே தீருவோம்' என்பது மத்திய அரசின் போக்காக இருந்தால் இந்தியை எதிர்க்கும் முதல் மாநிலம் கேரளமாகத்தான் இருக்கும்' என்று சொல்லுகிறார்!

"ஆகவே, இந்திய ஒருமைப்பாட்டுக்குக் கேடு வருமானால்—இந்தியத் துணைக் கண்டம் சிதறிவிடும் நிலை ஏற்பட்டால்—அதற்குக் காரணமாகக் குற்றக்கூண்டிலே நிற்கவேண்டிய ஒரே ஒரு மனிதர் மொரார்ஜி தேசாய் ஆகத்தான் இருக்க முடியும்."

—(அமைந்தகரை அண்ணா மன்றப் பொதுக்கூட்டத்தில்)

கடல் நீரின் உப்பை நீக்கும் புதிய கரிப் பொருள்!

உப்புக் கரிக்கும் கடல் நீரை நல்ல தண்ணீராக மாற்றுவதற்குச் சிறந்த வழிகள் என்ன உண்டு என ஆராய்ந்துவரும் அமெரிக்க விஞ்ஞானிகள் இப்போது 'கிராபைட்டிக் ஆக்சைடு' என்னும் புதிய கரிப் பொருள் ஒன்றை வைத்துச் சோதனை செய்து வருகிறார்கள்; புதிய பொருள் நல்ல டலன் அளிக்கும் என்று தெரிகிறது.

"இன்னும் சோதனைகள் செய்து செம்மையாக்கினால், புதிய கரிப் பொருள், உப்புத் தண்ணீரிலிருந்து பெரும்பாலான உப்பை நீக்கி விடுவதற்கு ஏற்ற சிக்கனமான வழியைக் காட்டும்" என்று இது வரை நடந்த ஆராய்ச்சியால் புலனாகிறது.

புதிய கரிப் பொருளை மெல்லிய சவ்வுபோல் செய்து உப்பு நீக்கப் பயன்படுத்துகிறார்கள். இந்தச் சவ்வை ஒரு சல்லடைக்கு ஒப்பிடலாம்; அது தூய தண்ணீரை மட்டும் தன் வழியாகக் கடக்க விடும்; தண்ணீரில் கரைந்திருக்கும் உப்பைப் பெரும்பாலும் தடுத்துவிடும். இதனால், இந்தச் சவ்வு வழியாக உப்புத் தண்ணீரைப் பாய்ச்சினால் மறுபுறம் நல்ல தண்ணீர் கிடைக்கும்.

காய்ச்சி வடித்தல் முறைப்படி, உலகம் நெடுகிலும் உப்புத் தண்ணீரிலிருந்து நாள்… கணக்கான கா… ணீர் உற்பத்… கிறது.

காய்ச்சி… முறைகள் … பெரிதும் வி… தடுத்துக் குடி… கொள் கலங்க… யாகும் 'பிளாஷ்… முறையாகும்; ஏராளமாக நல்ல தண்ணீர் தேவைப்படும் குடிநீர்த் திட்டம் உள்ள ஊர்களுக்கு மிக நல்ல முறை இது!

அம்பையில் கழகக் கூட்டம்

அம்பாசமுத்திரம் பேரறிஞர் அண்ணா மன்றத்தின் சார்பில் 17—6—68 அன்று ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது; தோழர் சங்கு சபாபதி தலைமைதாங்கினார்.

கூட்டத்தில் சட்டக் கல்லூரி மாணவி எஸ். கஸ்தூரி (பி.எஸ்சி.), பத்தமடை பரமசிவம், மாணவர் இளமாறன், சு. வேலாயுதம், ப. மணியம் ஆகியோர் பேசினர்.

செயலாளர் ச. சிவராம சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

கரை போட்ட வேட்டி --- சேலை கைத்தறிக்கே!

டில்லியிடம் தமிழக அரசு வற்புறுத்தும்

ஈரோடு, ஜுன், 24—"கரை போட்ட வேட்டி, வண்ண சேலை ஆகியவற்றை கைத்தறிக்கு ஒதுக்க வேண்டுமென மத்திய அரசை தமிழகம் வற்புறுத்தி வருகிறது" என்று அமைச்சர் சாதிக் பாட்சா கூறினார். அவர் மேலும் கூறியதாவது:—

"தி. மு. கழகம் பதவிக்கு வருவதற்கு முன்பே கைத்தறி நெசவாளர்களின் நலன்களுக்காகப் பாடுபட்டு வருகிறது. பதவிக்கு வந்தபின், கைத்தறித் துணித் தேக்கத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்திருக்கிறது; பஸ் போக்குவரத்து ஊழியர்களுக்குக் கைத்தறி ஆடைகளை அளித்துள்ளது.

"வண்ணச் சேலைகள், கரை போட்ட வேட்டி ஆகியவற்றை கைத்தறிக்கு ஒதுக்கவேண்டும் என்று இராஜாஜி அமைச்சரவை பரிந்துரை செய்தது: இதை அமுலாக்குமாறு மத்திய அரசை தமிழக அரசு வற்புறுத்தியுள்ளது."

மாயூரம் -- மாப்படுகையில் பொதுக்கூட்டம்

13—6—68-ல் மாயூரம்–மாப்படுகையில், தோழர் ஜீ. கே. மூர்த்தி தலைமையில் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் எம். ஏ. கோவிந்தராசன், கண்ணன், இரா. சண்முகம், அ. செங்குட்டுவன், கன்னையன், தேவேந்திரன் எம்.சி., என். கிட்டப்பா எம் எல் ஏ., புலவர் அறிவுடை நம்பி ஆகியோர் பேசினர்.

இறுதியில் கே. இராமதாஸ்—கலையரசி கலா நிகழ்ச்சி நடைபெற்றது.

தி. மு. கழக வேட்பாளர் கதிரவனை ஆதரியுங்கள்'

முஸ்லீம் லீக் தலைவர் காயிதே மில்லத் வேண்டுகோள்

சென்னை, ஜுன் 21—

தென்காசி இடைத் தேர்தலில் கழக வேட்பாளரை ஆதரித்து இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் எம்.பி. அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :—

"1968 ஜூலை 3-ம் நாள் நடைபெறவிருக்கும் தமிழகச் சட்டமன்றத் தென்காசித் தொகுதி இடைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் திரு கதிரவன் அவர்களுக்காக, 'உதய சூரியன்' சின்னத்தில் முத்திரை …டுத் …ங்கள் அருமையான …ன்புடன் வழங்க … மதிப்புக்குரிய …ருமக்கள் அனை… வேண்டிக்கொள் …றேன்.

…டுக் காலத்தில் தாய் …குச் சுபிட்சத்தைக் …ண்டுவர இயலாத காங்கரசு ஆட்சி சென்ற போக்கை மாற்றி, நாட்டுக்கு நலன் தரத்தக்க வழியில் தி. மு. க. அரசு திடமான நடை போடத் துவங்கியிருக்கிறது. நாட்டின் நலனையும், தங்கள் நலனையும் நாடுகிற மக்கள், இச்சாதனையைப் பாராட்டுகிறார்கள்; ஆனால், குற்றமே காண விழையும் எதிர்ப்பாளர்கள் அங்ஙனம் பாராட்டுவதில்லை; அவர்கள், குறைகள் பல கற்பனை செய்து தீய பிரச்சாரஞ் செய்து மக்களிடையே மனக் குழப்பத்தை உண்டுபண்ணவும், கூட்டுக் கட்சிகளைப் பிரிக்கவும், நமது தோழமைக் கட்சியின் பலத்தைக் குறைக்கவும் பெரிதும் முயற்சி செய்துவருகிறார்கள். இது தமிழ்நாட்டிற்கும், தாய்நாட்டிற்கும் இடையூறு செய்வதாகும்.

"இவ்விதச் சந்தர்ப்பத்தில் நாட்டின் நன்மையை உத்தேசித்து அனைவரும் ஒற்றுமையுடனும், சட்டுப்பாட்டுடனும் செயல்படவேண்டியது மிகவும் முக்கியமாயிருக்கின்றது.

"சென்ற பொதுத் தேர்தலில் தி. மு. கழகத்துக்கு மக்களின் அன்பினால் கிட்டிய பெரும் பலத்தை இன்னும் அதிகமாகப் பெருகிக் காட்டவேண்டியது, நாம் நாட்டுக்குக் கொண்ட கடனாகும்.

"அங்ஙனம் ஆதரவைப் பெருக்கிக் காட்டி நமது தோழமைக் கட்சி அரசுக்குத் தைரியமூட்டி, அவ்வரசு மக்களுக்கு இன்னும் பல நன்மைகள் செய்யும் பாதையில் திடமாக முன்னேறச் செய்வதற்காகத் தென்காசி போன்ற இடைத் தேர்தல்கள் மகா முக்கியமான கருவிகளாகும்.

"ஆகவே, வாக்காள அன்பர் ஒவ்வொருவரும் கட்டுப்பாடாக இருந்து ஜூலை 3-ம் நாள் தென்காசித் தொகுதி தேர்தலில் தவறாமல் தங்கள் வாக்குகளைத் தி. மு. க. வேட்பாளருக்கு அன்புடன் வழங்கி --- சிறப்பான வெற்றியைத் தந்து --- நாட்டின் நன்மைக்கு உதவுமாறு மறுபடியும் வேண்டிக்கொள்கிறேன்."

காங்கிரசு ஏட்டின் பொய்ப் பிரசாரம்

கழகச் செயலாளர் மறுப்பு

'சென்னை--புளியந்தோப்பில் இரண்டு தேசியத்தோழர்களுக்குக் கத்திக் குத்து' என்ற தலைப்பில் காங்கிரசு நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. மேலும், 'தி. மு. க.-வினர்தான் இதைச் செய்தார்கள்' என்றும் அது கூறுகிறது.

இந்தச் சம்பவத்திற்கும்—தி. மு. கழகத்திற்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை.

மேலும் காங்கிரசுக்காரர்களுக்கும்—ஜன சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்கும் ஏற்பட்ட தகராறு காரணமாகத்தான் கத்திக்குத்து சம்பவம் ஏற்பட்டதே தவிர, இதற்கும்—கழகத்துக்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை என்று சென்னை 33-வது வட்ட தி. மு க. செயலாளர் இரா. நாராயணசாமி அறிவிக்கிறார்.

கல்வியில் முதலிடம் பெறும் சிற்றூர்!

பெங்களூர், ஜுன் 24—மைசூர் மாநிலத்தில் கோலார் தங்கவயல்களிலிருந்து பத்து மைல் தூரத்திலுள்ள தேவராயசமுத்திரம் கிராமம் எழுத்தறிவில் முதலிடம் வகிக்கிறது.

இந்தக் கிராமத்தின் மக்கள் தொகை 1,200; இதில் 99-சதவிகிதத்தினர் எழுத்தறிவு உள்ளவர்கள்.

இந்தக் கிராமத்தைச் சேர்ந்த பலர் எஞ்சினீயர்களாகவும், டாக்டர்களாவும், நிர்வாகிகளாகவும் இருக்கிறார்கள்.

எல்லாத் துறைகளிலும் இந்தக் கிராமம் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

மாவட்டவாரியாகத் திட்டங்கள் தயாரிப்பு

திட்டக் குழுவின் யோசனையை 6 மாநிலங்கள் ஏற்றன

பெங்களூர், ஜுன் 24—மாவட்டவாரியாகத் திட்டங்களைத் தயாரிக்குமாறு திட்டக் குழு கூறிய யோசனையை 6-மாநிலங்கள் இதுவரையில் ஏற்றுக்கொண்டிருக்கின்றன.

மாவட்டவாரியாகத் தயாரிக்கப்படும் திட்டங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு நான்காவது ஐந்தாண்டுத் திட்டமாக உருவாக்கப்படும்.

சென்னை 10-வது வட்டம் லோகநாதன் நினைவு மன்றம்

5—6—68-ல் சென்னை 10-வது வட்டம் என். லோகநாதன் நினைவு மன்றப் பொது உறுப்பினர் கூட்டம் வட்டத் துணைச் செயலாளர் ந இராசமன்னர் தலைமையில் நடைபெற்றது; அதுபோது, 1?—2—67 முதல் 5—6—68 வரையிலுள்ள வரவு–செலவுக் கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டன; பின், நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது :—

அவைத் தலைவர் : வி. ஆர். நடேசன்; செயலாளர் : கே. வைத்திலிங்கம்; துணைச் செயலாளர் : சி. முனுசாமி; பொருளாளர் : இரா. பா. சூரி (தாஸ்): செயற்குழு உறுப்பினர்கள் : ஆர். இராசேந்திரன், வி. லோகநாதன், ஜே. கோபால், பி. சுப்பிரமணி, கே. செல்வம்.

கழகக்கொடி ஏற்றுவிழா

புத்தூரில் 16—6—68 காலை 9-மணியளவில் நாகை கோ. செல்வராசன் தலைமையில் நாகை நகர தி. மு. க. பொருளாளர் இரா. கல்யாணசுந்தரம் கழகக்கொடி ஏற்றி வைத்தார்.

முகவரி மாற்றம்

பரமத்தி சண்முகம்,
வட்ட தி. மு. கழகம்,
29, கோவை ரோடு, கரூர்.

ஆலந்தூர் நகரதி மு.க.

ஏழு வார்டு கிளைகளில் மறு தேர்தல்

சைதை வட்டம் ஆலந்தூர் நகரத்தில் வார்டுகள்வாரியாக அமைக்கப்பட்ட தி. மு. க. உட் கிளை (வார்டு கிளை)களில் நடைபெற்ற தேர்தல்களில், 'முறைப்படி உறுப்பினர்கள் கூடி தேர்தல் நடத்தவில்லை' என்று தலைமைக் கழகம் பரிசீலனை செய்து முடிவெடுத்து, கீழ்க்காணும் 7-வார்டுகளில் 30—6—68 ஞாயிறன்று காலை 10-மணிக்குத் தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர் தோழர் கோ. செங்குட்டுவன் அவர்கள் தலைமையில் மறு தேர்தல் நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

கீழ்க் குறிப்பிட்டுள்ள வார்டுகளுக்கான மறு தேர்தல், அந்தந்த வார்டுகளைச் சார்ந்த பொதுவான இடத்தில் நடைபெறும்.

மறு தேர்தல் நடக்கும் வார்டுகளின் எண்கள்:

4, 7, 8, 9, 10, 11, 15

ஆகிய ஏழு வார்டுகள்

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

குடிசைகளை எரிக்கும் 'தீயசக்திக'ளுக்கு முடிவு கட்டுவோம்!

தமிழகமெங்கும் தீப்பற்றாக் குடில்கள் அமைக்க முயலுவோம்

முதலமைச்சர் அண்ணா சூளுரை— ஓடுகள் வழங்கு விழாவில் அறிவிப்பு

சென்னை, ஜூன் 24—

"இதுவரையில் ஓலைக் குடிசைகளில் வசிப்பதுதான் சிக்கனமானது--வசதியானது எனக் கருதி ஏழை மக்கள் குடிசைகளில் வாழ்ந்துவந்தனர்; இப்போது கயமைத்தனம் அதிகமாகிவருவதால், தங்களுக்குள் ஏற்படுகின்ற அரசியல் விரோதத்தைத் தீர்த்துக்கொள்ளக் குடிசைகளை எரிக்கும் ஆபத்தான செய்களில் 'சமூக விரோதச் சக்தி'யினர் ஈடுகின்றனர்!

"இதுபோன்ற செயல் சென்னையில் மட்டும் அல்ல--தமிழ்நாடு முழுவதும் நடைபெறுகிறது; எனவே, சென்னையில் மட்டுமல்லாமல் தமிழகம் முழுவதும், தீப்பற்றி எரியும் குடிசைகளை அகற்றிவிட்டு, தீப்பிடிக்காத வீடுகளைக் கட்ட அரசு திட்டமிட்டிருக்கிறது.

"இந்த அரசின் காலத்திற்குள்ளேயே எவ்வளவு விரைவாகத் தமிழகத்தில் குடிசைகளை நீக்கிவிட்டுத் தீப்பிடிக்காத வீடுகளைக் கட்டித் தரமுடியுமோ அவ்வளவு விரைவில் கட்டித் தருவதற்குத் திட்டமிட்டிருக்கிறோம்; இதற்கு வசதியுள்ளவர்கள்--நல்லவர்கள் தாராளமாக நிதியுதவ முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், கோயம்பேடு கிருஷ்ணா ஓடு தொழிலதிபர்கள், ரூ. 25,000 மதிப்புள்ள ஒரு இலட்சம் ஓடுகளை நன்கொடையாக அளிக்கும் விழாவில் நன்றி தெரிவித்துப் பேசுகையில் சுட்டிக்காட்டிக் கேட்டுக்கொண்டார்.

குடிசைவாழ் மக்களுக்குத் தீப்பற்றாத வீடுகளைக் கட்டித் தரத் தமிழக அரசு திட்டம் தீட்டியிருப்பது தெரிந்ததே.

அந்தத் திட்டத்திற்கு உதவும் வகையில் சென்னை கிருஷ்ணா ஓடு உற்பத்தித் தொழிற்சாலை அதிபர்கள் ஒரு இலட்சம் ஓடுகளை அளிப்பதையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட விழாவில், கல்வி–தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், பொதுப் பணி அமைச்சர் மு. கருணாநிதி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வேளாண்மைத் துறை அமைச்சர்

ஏ. கோவிந்தசாமி

மருத்துவ மனையிலிருந்து இல்லம் திரும்பினார்

சென்னை, ஜூன் 24—

தலைமை மருத்துவமனையில், ஈரல் சம்பந்தப்பட்ட நோயின் காரணமாகச் சென்ற ஏழு கிழமைகளாச் சிகிச்சை பெற்றுவந்த வேளாண்மைத்துறை அமைச்சர் ஏ, கோவிந்தசாமி அவர்கள், கடந்த சனியன்று மாலை இல்லம் திரும்பினார்.

ஒரு திங்கள் வரையில் முழு ஓய்வு எடுத்துக் கொள்ளும்படி அவருக்கு டாக்டர்கள் யோசனை கூறியுள்ளனர்.

முஸ்லீம் பெரியார்கட்குக் காட்டும் மரியாதை

'சீதக்காதி நகர்' பெயர் சூட்டும் விழாவில் அமைச்சர் மு. கருணாநிதி விளக்கம்

சென்னை, ஜூன் 23—

சென்னை 14-வது வட்டம் துறைமுகப் பகுதிக்கு 'சீதக்காதி நகர்' என்று பெயர் சூட்டப்பட்டிருப்பதை முன்னிட்டுப் பேருந்துகளில், 'துறைமுகம்' என்பதற்குப் பதில் 'சீதக்காதி நகர்' என்ற பெயரைப் பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் பொருத்திவைத்தார்.

இதையொட்டி சென்னை கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற விழாவிற்கு திரு. ஏ. கே. ஏ. அப்துல் சமது தலைமைவகித்தார்.

அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் ஒரு பேருந்தில் 'சீதக்காதி நகர்' என்ற பெயர்ப் பலகையைப் பொருத்திவைத்துப் பேசுகையில், முஸ்லீம் பெரியார்களுக்குச் சிறப்புச் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில்தான் துறைமுகத்திற்கு, 'சீதக்காதி நகர்' என்று பெயர் சூட்டப்பட்டிருப்பதாகக் கூறினார்.

"பல ஆண்டுகளாகவே முஸ்லீம் சமுதாயத்தோடு தி. மு. கழகம் இணைந்துநின்று பணியாற்றி வருகிறது" என்றும் விளக்கினார்.

மேயர் டாக்டர் அபிபுல்லா பேக் சிறப்புரையாற்றினார்.

வட்ட மாநகராட்சி உறுப்பினர் ஆர். சிலார் மியான் அனைவரையும் வரவேற்றார்.

அரசுப் போக்குவரத்து இயக்குநர் டி. வி. வெங்கட்ராமன், அமைச்சர்களுக்கும் மற்றவர்களுக்கும் மலர்மாலைகள் அணிவித்துச் சிறப்பித்தார்.

மாநகராட்சி தி. மு. க. தலைவர் வி. முனுசாமி—மற்றும் உறுப்பினர்கள், முஸ்லீம் பிரமுகர்கள், மற்றும் பலரும் விழாவில் கலந்துகொண்டனர்.

திரு. எஸ். ஏ. காஜா மொய்தீன் எம். பி. நன்றி கூறினார்.

சிக்கனமான முறையில் ரூ. 515 செலவில் தொழிற்சாலையினரால் கட்டப்பட்ட தீப்பற்றாத மாதிரி வீடு ஒன்றையும் அண்ணா, நெடுஞ்செழியன், கருணாநிதி ஆகியோரும் பார்வையிட்டனர்.

10-அடி சதுரமுள்ள இந்த வீடு, மங்களூர் ஓடு வேயப்பட்டது.

புயல் -- காற்றில் ஓடுகள் பறக்காமல் இருக்க ஓடுகளில் துளை போட்டு விட்டங்களுடன் ஓடுகளைக் கம்பிப் போட்டுப் பிணைத்திருந்தார்கள்.

"இந்த வீடு 24-மணி நேரத்தில் கட்டி முடிக்கப்பட்டது; ரூ. 515.05-செலவு ஆயிற்று" என்றும், அண்ணா அவர்களிடம் தொழிற்சாலை நிர்வாகிகள் தெரிவித்தனர்.

துவக்கத்தில் கிருஷ்ணா ஓடு உற்பத்தித் தொழிற்சாலை நிர்வாக இயக்குநர்கள் ஏ. ஆர். கிருஷ்ணமூர்த்தி, ஏ. ஆர். இராசகோபால், இயக்குநர்கள் கே. பாலசுப்பிரமணியம், ஆர். இராம்ஜிதாஸ், ஏ. கே. முத்துசாமி ஆகியோர் முதலமைச்சருக்கும், அமைச்சர்களுக்கும் தொழிற்சாலையைச் ... றிக் காண்பித்தனர் ...

பின்னர் தீப் ... டும் தமிழக அர ... உதவும் வண்ண ... ஓடுகளை நன்கொ ... கும்வகையில் ஒரு ஓ ... சர்களிடம் அளித்த ...

முதலமைச்சருக்கும், ... அமைச்சர்களுக்கும் தொழி ...

மேற்பார்வையாளர் சுப்பரத்தினம், ஊழியர்கள் சார்பில் வரவேற்பு இதழை வாசித்தளித்தார்.

தொழில் இயக்குநரில் ஒருவரான கே. பாலசுப்பிரமணியம், அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

தொழிலாளருக்கு ஒரு நாள் ஊதியம் அன்பளிப்பு

"முதலமைச்சரும், மற்ற இரு அமைச்சர்களும் தொழிற்சாலைக்கு வந்திருந்து பார்வையிட்டதன் நினைவாகத் தொழிலாளர்கள் அனைவருக்கும் ஒரு நாள் ஊதியம் அன்பளிப்பாக அளிக்கப்படும்" என நிர்வாகி கூறினார்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

★

26--6--68

வேடசந்தூர்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு மாரியம்மன் கோயில் திடலில்; தலைவர்: கே. ஏ. எம். தங்கராசன்; பேசுவோர்: கேரள சுந்தரம், செ. தம்பித்துரை, கே. எஸ். சந்தானம் எம்.சி., ப. முத்துசாமி, வி. நாகசுந்தரம்.

வீரவநல்லூரில் தொழில் அமைச்சர்

கூட்டுறவுச் சங்கத்தைப் பார்வையிட்டார்

18—6—68 காலை 11 மணியளவில், தமிழகத் தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், வீரவநல்லூர் பாய் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தைப் பார்வையிட்டார்.

சங்கத்தின் தனி அதிகாரி பி. கோபாலகிருஷ்ணன், அமைச்சருக்கு மாலையணிவித்து வரவேற்றார்.

அமைச்சர், சங்கத்தின் வளர்ச்சிக்குப் பட்டியலைப் பார்வையிட்டு —தொழிற்கூடத்திலுள்ள உயர்ரகப் பட்டுப் பாய், நெசவுத் தொழில் முதலியவைகளையும் பார்வையிட்டு—பாய் நெசவுத்தொழில் திறனையும், சங்க வளர்ச்சியையும், சங்கம் இலாபத்தில் இயங்குவதையும் பாராட்டிப் பார்வையாளர் புத்தகத்தில் குறிப்பு ஒன்றை எழுதினார்.

அமைச்சர் அவர்களுடன் நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இராசேந்திரன், நெல்லை மாவட்ட குடிசைத் தொழில் அதிகாரி என். ஆர். தங்கவேலு மாவட்டத் தொழில்துறை இயக்குநர் இராகவன் ஆகியோர் வந்திருந்தனர்.

மின்சார ஊதியக் குழுவின் சிபாரிசுகள்

... மாறு உத்தரவு

... ல்லி, ஜூன் 24— ... வனங்களுக்கான ... யின் ஒருமன ... லை மாறுதல் ... ற்றுக்கொண் ...

... க் கொண்டுள்ள ... வாறு ஊதியக் குழுவின் சிபாரிசுகளை அமுலாக்குமாறு தொழிலதிபர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

இடைக்கால நிவாரணம்—ஊதியக் குழு சிபாரிசு செய்துள்ளபடி—'1967 சனவரி 1' என்பதற்குப் பதில், '1967 ஜூலை 1'-லிருந்து தரப்படும்.

அரசு இலாகாக்களால் நடத்தப்படும் மின்சார நிறுவனங்களுக்கு அரசின் முடிவு பொருந்தாது.

குழுவின் சிபாரிசுப்படி, மின்சார நிறுவனங்களில் பணியாற்றுபவர்களுக்கு ரூ 5-க்கும்—ரூ 20-க்குமிடையே இடைக்கால நிவாரணம் கிடைக்கும்.

மாநகராட்சி விளையாட்டுத் திடல் திறப்பு விழா

சென்னை 92-வது வட்டம் கோடம்பாக்கம் டிரஸ்டுபுரம் முதல் சாலையில் உள்ள மாநகராட்சி விளையாட்டுத் திடலை சுகாதாரத் துறையமைச்சர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் திறந்துவைப்பார்; இவ்விழா, 26—6—68 மாலை 6-மணிக்கு மேயர் டாக்டர் அபிபுல்லா பேக் தலைமையிலும்—திரு. கோ. செங்குட்டுவன் முன்னிலையிலும் நடைபெறும்; ஓய்வுபெற்ற காவல்துறைத் துணை ஆணையாளர் திரு. வி. குழந்தைவேலு அவர்கள், திடலில் உள்ள கிடங்கைத் திறந்துவைப்பார்; வரவேற்பு: சா. கணேசன் எ.சி.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நகர்ப் பகுதிகளில் 6-இலட்சம் பேருக்கும் ரூபாய்க்குப் படி அரிசித் திட்டம் அமுலாக்கப்பட்டிருக்கிறது. எஞ்சிய ஒரு கோடி மக்களுக்கும் இன்று ரூபாய்க்கு ஒரு படி அரிசி கிடைப்பதற்கு வழிவகை செய்திருப்பது தமிழக அரசின் மாபெரும் சாதனையாகும்."

விழாவிற்கு, உத்திரமேரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். கே. இராசகோபால் தலைமை தாங்கினார்.

வானொலிப் பெட்டியை நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிட்டிபாபு திறந்துவைத்தார்.

வள்ளுவர் பெயரில் ஏற்படுத்தப்பட்ட பூங்காவை, மாவட்ட கலெக்டர் கே. இலட்சுமிகாந்தன் பாரதி திறந்துவைத்தார்.

செங்கற்பட்டு மாவட்ட தலைநகர் மாற்றம்

ஜூலை 6-ம் நாள் நடைபெறும்

"செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகரை காஞ்சிபுரத்திற்கு மாற்றும் விழா, ஜூலை 1-ம் நாளுக்குப் பதில் ஜூலை 6-ம் நாள் நடைபெறும்"

என்று அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள் தெரிவித்தார்.

விழாவுக்கு முதலமைச்சர் அண்ணா அவர்கள் தலைமைதாங்குவார்.

உணவுத் துறை அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், கலெக்டர் அலுவலகத்தைத் திறந்துவைப்பார்.

பொதுப் பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், கலெக்டர் அலுவலகக் கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டுவார்.

தொழிலாளர் நலத் துறை அமைச்சர் செ. மாதவன் அவர்கள், ஊழியர் குடியிருப்பு விடுதிக்கு அடிக்கல் நாட்டுவார்.

தலைநகர் மாற்றப்படுவதையொட்டி காஞ்சிபுரத்தில் ஜூலை 6-ம் நாள்முதல் ஒரு கிழமைக்குக் கிராம நல வளர்ச்சி பொருட்காட்சி நடைபெறும்.

காஞ்சிபுரத்திற்கு அதிக பஸ்கள் விடுவதற்குத் திட்டம்

கலெக்டர் தரும் தகவல்

"ஜூலைத் திங்களிலிருந்து செங்கற்பட்டு மாவட்டத் தலைநகர் காஞ்சிபுரத்திற்கு மாற்றப்படுவதால், கும்முடிப்பூண்டு—காஞ்சிபுரம்; பள்ளிப்பட்டு—காஞ்சிபுரம்; பொன்னேரி—காஞ்சிபுரம் ஆகிய மார்க்கங்களில் இரண்டிரண்டு பஸ்கள் விடுவதற்குத் தமிழக அரசு திட்டமிட்டிருக்கிறது"

என, செய்தியாளர்களி... மா...ட்ட கலெக்டர் தெரிவி... கிறார்.

"சைதாப்பேட்டையிலுள்... கலெக்டர் அலுவலகத்தின் பெரும்பான்மையான பிரிவுகள் காஞ்சிபுரத்திற்கு மாற்றப்பட்டுவருகின்றன" என்றும் அவர் குறிப்பிட்டார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்கள் ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.